அரசாங்க அறிவித்தல்

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

# க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2017
# பெறுபேறு மீளாய்வு செய்தல்

மேற்படி பரீட்சையின் பெறுபேற்று ஆவணங்கள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் ஏற்கனவே அஞ்சலிடப்பட்டுள்ளன.

இப்பரீட்சையின் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க 30 செ.மீ x 20 செ.மீ அளவில் தயாரித்துப் பூரணப்படுத்தி **2018.01.15** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீடு (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.1503, கொழும்பு."** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெறுபேறு மீளாய்வு (உயர் தர)ப் பரீட்சை - 2017"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாக பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

**விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கும் போது பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

1. பாடசாலை விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த அதிபரூடாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தாமே மேற்கூறிய முகவரிக்கும் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படியே தயாரிக்கப்படல் வேண்டும்.
3. ஒரு பாடம் மீளாய்வு செய்வதற்கான கட்டணம் ரூபா 250/- ஆகும். உரிய கட்டணத்தைத் தபாற் காரியாலயம் அல்லது உபதபாற் காரியாலயத்தில் செலுத்திப் பெறப்படும் பற்றுச் சீட்டின் **மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் கழராதவாறு சரியாக ஒட்டி** அனுப்புதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் இலக்கத்தையும், விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டையும் தம்மிடம் வைத்திருக்கவும். (பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது உசிதமானதாகும்).
4. முத்திரைகள், காசோலைகள், காசுக் கட்டளைகள், தபாற் கட்டளைகள் **ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
5. ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. பெறுபேற்று அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர், பாட இலக்கம், பாடம், பெற்ற தரம், மொழி மூலம் என்பவற்றைச் சரியாக எழுதுதல் வேண்டும். அறிவுறுத்தல்களைச் சரியாக வாசித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். **குறிப்பாக 01(i), பாட எண்ணும் பாடமும் குறிக்கும் போது சரியாகப் பொருந்தும் வகையில் குறித்தல் வேண்டும்.**
7. பூரணமற்ற விபரங்களை கொண்டுள்ள விண்ணப்பங்களும் 2018.01.15ஆம் திகதிக்கு பின்னர் அனுப்புவோரினது விண்ணப்பங்களும், உரிய கட்டணம் செலுத்தாதவர்களின் விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட கட்டணங்களும் மீளச் செலுத்தப்படமாட்டாது.
8. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை மட்டும் பூரணப்படுத்துதல் போதுமானது.
9. **பாட எண்: 12 - பொதுச் சாதாரண பாடத்தில் 30 இற்கு குறைவான புள்ளிகள் பெற்றதனால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீளாய்விற்காக விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.**
10. இவ்வறிவித்தலும் மாதிரி விண்ணப்பப்படிவமும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் **(www.doenets.lk)** இடப்பட்டுள்ளது.

**கவனிக்க:- பிழையான தகவல்களை உள்ளடக்கிய மீளாய்வு விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை,
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல.1503, கொழும்பு.
2017.12.28 ஆம் திகதி.

**B. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

**சகல பாடசாலை அதிபர்களுக்கும்,**

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2017
## பெறுபேறு மீளாய்வு செய்தல்

மேற்படி பரீட்சையின் பெறுபேற்று ஆவணங்கள் அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அஞ்சலிடப்பட்டுள்ளன.

இப்பரீட்சையின் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரரால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க 30 செ.மீ x 20 செ.மீ அளவில் தயாரித்துப் பூரணப்படுத்தி **2018.01.15** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீடு (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.1503, கொழும்பு."** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெறுபேறு மீளாய்வு (உயர் தர)ப் பரீட்சை - 2017"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாக பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

**விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கும் போது பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.**

1. பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் தமது பாடசாலை அதிபரூடாக அனுப்பப்படுவதுடன் அதிபரினால் சகல விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு அட்டவணைப்படுத்தி ஒரே உறையிலிட்டு மேற்கூறிய முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படியே தயாரிக்கப்படல் வேண்டும்.
3. ஒரு பாடம் மீளாய்வு செய்வதற்கான கட்டணம் ரூபா 250/- ஆகும். உரிய கட்டணத்தைத் தபாற் காரியாலயம் அல்லது உபதபாற் காரியாலயத்தில் செலுத்திப் பெறப்படும் பற்றுச் சீட்டின் **மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் கழராதவாறு சரியாக ஒட்டி** அனுப்புதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் இலக்கத்தையும், விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டையும் தம்மிடம் வைத்திருக்கவும். (பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது உசிதமானதாகும்).
4. முத்திரைகள், காசோலைகள், காசுக் கட்டளைகள், தபாற் கட்டளைகள் **ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
5. ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. பெறுபேற்று அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர், பாட இலக்கம், பாடம், பெற்ற தரம், மொழி மூலம் என்பவற்றைச் சரியாக எழுதுதல் வேண்டும். அறிவுறுத்தல்களைச் சரியாக வாசித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். **குறிப்பாக 01(i), பாட எண்ணும் பாடமும் குறிக்கும் போது சரியாகப் பொருந்தும் வகையில் குறித்தல் வேண்டும்.**
7. பூரணமற்ற விபரங்களை கொண்டுள்ள விண்ணப்பங்களும் 2018.01.15ஆம் திகதிக்கு பின்னர் அனுப்புவோரினது விண்ணப்பங்களும், உரிய கட்டணம் செலுத்தாதவர்களின் விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட கட்டணங்களும் மீளச் செலுத்தப்படமாட்டாது.
8. தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 07 வரையிலான தகவல்களை மட்டும் பூரணப்படுத்துதல் போதுமானது.
9. **பாட எண்: 12 - பொதுச் சாதாரண பாடத்தில் 30 இற்கு குறைவான புள்ளிகள் பெற்றதனால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீளாய்விற்காக விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.**
10. இவ்வறிவித்தலும் மாதிரி விண்ணப்பப்படிவமும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் **(www.doenets.lk)** இடப்பட்டுள்ளது.

**கவனிக்க:- பிழையான தகவல்களை உள்ளடக்கிய மீளாய்வு விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

**B. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை,
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த.பெ.இல.1503, கொழும்பு.
2017.12.28 ஆம் திகதி.

| மாதிரி விண்ணப்பப்படிவம் (30 செ.மீ x 20 செ.மீ) |
|---|

| ஒரு பாடத்துக்கு ஒரு விண்ணப்பப்படிவப்படி அனுப்புதல் வேண்டும். |
|---|

# க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2017

## பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

01. (i)

| மீள்பரிசீலனை செய்யவேண்டிய பாட எண் மற்றும் பாடம் | | தொடர் இலக்கம் (அலுவலக உபயோகத்திற்காக) | பரீட்சைச் சுட்டெண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பெற்ற தரம் : ☐ (iii) மொழி மூலம் : ☐

02. (i) விண்ணப்பதாரியின் பெயர் : வண./ திரு./ திருமதி./ செல்வி : ........................................................................
(முதலெழுத்துக்களுடன்)

(ii) தனிப்பட்ட முகவரி : ..........................................................................................................................................

(iii) தே.அ.அ இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐ (iv) தொ.பேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

03. தாங்கள் பாடசாலைப் பரீட்சார்த்தியா? ஆம் ☐ இல்லை ☐

04. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சை நிலையத்தின் பெயர் : ..................................................................................

05. ரூ. 250/- (ரூபா இருநூற்றி ஐம்பது) பணம் செலுத்திய பற்றுச்சீட்டு விபரம்

(i) பற்றுச்சீட்டு இலக்கம் :.................................................. (ii) திகதி :........................................

(iii) தபால்/ உப தபால் அலுவலகம் :..........................................................................................

06. அஞ்சல் அலுவலகத்தில் பணம் செலுத்தியதற்காகப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இதன் மறுபக்கத்தில் கழராதவாறு ஒட்டவும். அதன் போட்டோப்பிரதி ஒன்றைத் தங்கள் வசம் வைத்திருக்கவும். பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது பொய்யான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் இவ்விண்ணப்பப்படிவத்தை நிராகரிப்பதற்கும், மீளாய்வின் பெறுபேறாக ஏற்படும் மாற்றத்தால் Z புள்ளியில் அல்லது பெற்ற புள்ளியினதும் தரத்தினதும் அதிகரித்தலை அல்லது குறைவடைதலை ஏற்றுக்கொள்வதற்கும் மீளாய்வு தொடர்பான சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுவதற்கும் உடன்படுகிறேன் என உறுதியளிக்கின்றேன்.

திகதி : ...........................

.....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

08. பாடசாலைப் பரீட்சார்த்திக்கான அதிபரின் சான்றுப்படுத்தல்:

மேற்குறித்த விண்ணப்பதாரி என்னுடைய பாடசாலையின் மாணவன்/ மாணவி என்பதையும் இங்கு குறிப்பிட்டுள்ள சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர், பாடம், பாட எண், மொழி மூலம், பெற்ற தரம் என்பன பெறுபேற்று அட்டவணையின்படி சரியானவை எனவும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதி செய்கின்றேன்.

............................................
அதிபரின் கையொப்பம்

அதிபரின் பெயரும் முகவரியும்:
திகதி :
பதவி முத்திரை :

**கவனிக்க : 1. தனிப்பட்ட பரீசார்த்திகள் இல 01 தொடக்கம் 07 வரை மட்டும் பூர்த்தி செய்க.**

**2. பூரணப்படுத்திய விண்ணப்பத்தை பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல.1503, கொழும்பு. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.**